[2003 நவம்பர் 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. இன்றைக்கு துணை நிதிநிலை அறிக்கை மீது விவாதம் இருக்கிறது. எனவே இன்றைக்கு உங்களுடையதை எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்)...

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: இன்னும் ஒரு நாள்தான் இருக்கிறது. எதையுமே எடுக்கப் போவதில்லை. (குறுக்கீடுகள்) ** (குறுக்கீடுகள்)

டாக்டர் க. பொன்முடி: விளக்கம் சொல்ல வாய்ப்பு கொடுங்கள் (குறுக்கீடுகள்)

3. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டம், திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறந்து விடுதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதத்திற்கு இடமில்லை. (குறுக்கீடுகள்) திரு. வி. ஜெயராமன். (குறுக்கீடுகள்).

முற்பகல் 11-30

திரு. வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரம்பிக்குளம் ஆழியாறு அணைக்கட்டுத் திட்டத்தில் திருமூர்த்தி அணையின் முதலாம் மண்டலத்திலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் விட வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

அறிக்கை

தற்போது அணையிலுள்ள நீரின் இருப்பு ஒரு முழுப் பயிர் காலத்திற்கும் நீர் விட போதுமானதாக இல்லை. எனினும் தற்போது இருப்பில் உள்ள நீர் அளவைக் கவனத்தில் கொண்டு மற்றும் விவசாயிகளின் கோரிக்கையின் படியும் சிறப்பு நனைப்பாக (Special Wetting)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருமுறை 16 நாட்களுக்கு அதாவது 32 நாட்களுக்கு தண்ணீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்து அணையின் நீர் இருப்பு அதிமாகும்பொழுது தொடர்ந்து பாசனத்திற்குத் தண்ணீர் வழங்குவது குறித்து ஆராயப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெயராமன், ஒரு கேள்வி கேளுங்கள்.

திரு. வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அணையின் நீர் இருப்பு குறைவாக இருப்பதால் இரண்டு முறை ஒரு மாத காலத்திற்குத் தண்ணீர் விட முடியும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை இரண்டு மாத காலத்திற்கு நீட்டித்துக் கொடுத்து சிறு பயிர்கள், தானிய பயிர்கள் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப் பாசனத்தில் இன்றைய நீர் இருப்பு............ (மணியடிக்கப்பெற்றது)

2. சிறப்புக் கவன ஈர்ப்பு தொடர்ச்சி

(ஆ) விழுப்புரம் நகர்மன்றம் செயல்படாமை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், எதிர்கட்சித் தலைவர் ஏதோ சொல்கிறார், கேட்டுக்கொள்ளுங்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் நகராட்சி மன்றம் சார்பாக இங்கே எழுப்பப்பட்ட இந்தப் பிரச்சினையில் முதலமைச்சர் அவர்கள் கடுமையான குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, குற்றச்சாட்டு இல்லை. உண்மை நிலையை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நிலைமையை அவர்கள் விளக்கி இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)